Mr. SPEAKER: I am not saying about ordinary administration. What I am saying is that I understand from the Government that there is a possibility of action being initiated. Let us not say anything about the merits of the matter, which will be the subject of the case.

Thiru R. PONNAPPA NADAR: My information is that so
10-30 p.m. far no First Information Report has been registered and even if it was registered, it would have to be sent to the Court within 24 hours. So far as this incident is concerned, no proper legal steps have been taken. So, this is a fit case which can be discussed by this House so that recurrence of such incidents may be prevented in the near future. Also, the law and order position is gradually deteriroating in that district and I read in the newspapers that proceedings under Section 32 of the Police Act have been invoked and processions and meetings have also been prohibited. So, in the light of these developments which have occurred at Madurai, it would be proper that this House do stand adjourned to discuss this urgent matter of public importance.

(திரு. கரு. சீமைச்சாமி அவர்கள் எழுந்தார்கள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வழக்குகள் வரக்கூடிய நிலைமைகள் இருக்கும்போதே, அந்த வழக்கில் தீர்க்கப்படவேண்டிய காரியங்கள் பற்றி தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கக்கூடாது.

(iv) மதுரையில் திரு. எஸ். முத்து தாக்கப்பட்டது.

திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, விதி 42-ன் கீழ் அவையின் இன்றைய நடவடிக்கைகளை ஒத்திவைத்து கீழ்கண்ட அவசர முக்கியத்துவம் வாய்ந்த பொருள்பற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்:—

"மதுரை மாநகரில் ** பலாத்காரமாக சட்டமேலவை உறுப்பினர் திரு. எஸ். முத்து அவர்களையும் அவர் சென்ற காரையும் வழிமறித்து அவரை அவதூறாகப் பேசி, கற்களை அவர் கார்மீது வீசி அவருக்கும், அவர் காருக்கும் சேதம் விளைவித்துள்ளமை குறித்து விவாதிக்க."

மேலவை உறுப்பினர் திரு. முத்து அவர்கள் கோர்ட்டுக்குச் சென்று விட்டு திரும்பி வருகிறபோது அங்கு 100 பேர்கள் காங்கிரஸ்காரர்கள் கூடி முத்து ஒழிக என்று கோஷம் போட்டு, போலீஸ் வந்து என்னை வண்டியில் ஏற்றியிருக்காவிட்டால் என் உயிருக்கே அபத்து வந்திருக்கும் என்று முத்து அவர்கள் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார்கள். நேரிலேயும் சொல்லியிருக்கிறார்கள். அதன் காரணமாக மதுரையில் ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பீதி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அங்கு அமைதியை நிலைநாட்டுவது பற்றி இந்த அவையில் விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE: Sir, on a point of order. . . .

திரு. பி. ஜி. கருத்திருமன் : காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வதை சபாநாயகர் அவர்கள் எப்படி அனுமதிக்கலாம் ?

Dr. H. V. HANDE: Sir, in this particular case a Member of the Upper House has been attacked and prevented from coming to the Upper house. So, I want a ruling from the Honourable Speaker whether it comes under an adjournment Motion or a previlage motion.

** பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க நீக்கப்பட்டது.

MR. SPEAKER : As regards the matter raised by the Hon. Member, Dr. Hande, if there is a privilege issue, it must be taken up in the Upper House.

As regards the point raised by the Leader of the Opposition, let him spare me. I have no right of speech.

எனக்கு பேச உரிமை இடையாது. ஆகவே, என்னைத் தாக்கினால் என்னை தடுத்துக்கொள்ளக்கூட எனக்கு உரிமையில்லை அரசியல் சட்டப் படி. ஆகவே பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்றால் என்ன பாயின்ட் ஆஃப் ஆர்டர் என்று சொல்லுங்கள். எப்படி சபாநாயகர் அனுமதிக்கலாம் என்றெல்லாம் என்னைத் தாக்கிப் பேசினால், பேரவைத் தலைவர் தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய அளவில் பேச்சு உரிமை கொடுக்கப்படவில்லை, அரசியல் சட்டத்தில். ஆகவேதான் அவரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசக்கூடாது என்று விதிமுறைகள் இருக்கின்றன. இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் 'காங்கிரஸ்காரர்கள்' என்று குறிப் பிட்டிருக்கலாமா என்று கேட்டார்கள். என் கையில் உள்ள ஒற்றிவைப்புத் தீர்மானத்தில் மதுரை மாநகரில் பலாத்காரமாக சட்ட மேலவை உறுப்பினர் திரு. எஸ். முத்து அவர்களையும் அவர் சென்ற காரையும் வழிமறித்து அவரை அவதூறாகப்பேசி, கற்களை அவர் கார்மீது வீசி அவருக்கும் அவர் காருக்கும் சேதம் விளைவித்துள்ளமை....' என்றுதான் இருக்கிறது. அவர்கள் வாசித்ததில் 'காங்கிரஸ்காரர்கள்' என்ற சொல் இருக்குமானால், அந்தத் தீர்மானத்தில் 'காங்கிரஸ்காரர்கள்' என்ற சொல்லை அவர் பயன்படுத்தியிருக்கக் கூடாது. அதை வெட்டித்தான் நான் அனுமதித்தேன். தீர்மானத்தில் 'காங்கிரஸ்காரர்கள்' என்ற சொல் இருக்குமானால், அந்தச் சொல்லை தீர்மானத்திலிருந்து வெட்டி விடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. இராமமூர்த்தி : என் ஒற்றிவைப்புத் தீர்மானத்தைப் பற்றி என் கருத்துக்களைச் சொல்ல எனக்கு சந்தர்ப்பம் தரப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் துணைத் தலைவர் அவர்கள் அதுபற்றி சொல்லியாகிவிட்டது. 'Law of contempt' பற்றி உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்.

It applies not only from the date of filing the case, but also from the date when the possibility of the action arises.

வழக்கு பதிவு செய்யும் நிலைமையிலிருக்கும்போதும், அதைப் பற்றி, அதைப் பாதிக்கக்கூடிய வகையில் கருத்துக்களைச் சொல்லாமல் இருந்தால் நல்லது. இந்த ஒற்றிவைப்புத் தீர்மானத்தை திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திரு. ராமமூர்த்தி அவர்களும், திரு. சித்தன் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். பொதுவாக ஒரு கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் பேசினதே போதும் என்று கருதுகிறேன். நீங்கள் ஏதாவது சொல்லவேண்டுமென்றால் சொல்லுங்கள்.

திரு. க. இராமமூர்த்தி : இந்த மதுரை நிகழ்ச்சியைப் பொறுத்த வரையில் அந்த இடத்தில் பெருமக்கூட்டம் கூடும், அங்கு அமைதிக்குப் பங்கம் ஏற்படும் என்பது தெளிவாகத் தெரிகிற நேரத்தில் கூட அங்கு இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றன. அங்கு போதுமான பாதுகாப்பு தரப்படாத நிலை சில கட்சி முக்கியஸ்தர்கள், அரசியல் முக்கியஸ்தர்கள் செல்கிற இடங்களில், அந்த பலதரப்பட்ட மனமாற்றங்கள் உள்ள கட்சி காரர்கள் இருக்கும் நிலையில் போதுமான அளவிற்கு பாதுகாப்பு தரப்பட வில்லை, அதற்கான ஏற்பாடுகள் கூட இருந்ததாகத் தெரியவில்லை. அந்த அளவில் இந்த அரசாங்கம் தன் பொறுப்பைத் தட்டி கழித்திருக்கிறது. அந்த நிகழ்ச்சி நடைபெற்றாலும் பரவாயில்லை என்ற நிலையில் அரசு இருந்ததோ என்ற ஐயம் ஏற்படும் நிலை இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச அனுமதி கொடுத்தால் குற்றச் சாட்டுகள் வேண்டுமா? இந்த முறையில் சொல்ல வேண்டுமா? திரு. பூவராகன் அவர்கள் பேச இருக்கிறார்கள். எல்லாம் சேர்த்துச் சொல்லலாம். ஒரு கட்சியில் இருபது பேர்கள் கையெழுத்து போட்டு ஒரு தீர்மானம் கொடுத்தால் இருபது பேர்களையும் பேசுவதற்குக் கூப்பிட நான் கடமைப் பட்டவன் அல்ல. எதிர்கட்சி தலைவர் அவர்களின் கருத்தைக் கேட்டுவிட்டு அடுத்தாற்போல் அரசினரின் கருத்து என்னவென்று அறியவேண்டும். அரசு என்றால் அமைச்சர்கள் எல்லோருடையவும் கருத்துக்களைக் கேட்பதா? வரப்போகிற வழக்கைப் பற்றி நீங்கள் சொல்லக்கூடிய கருத்துக்கள் அதைப் பாதிக்கக்கூடிய முறையில் இருக்கக்கூடாது. உங்கள் துணைத் தலைவர் அவர்கள் சொன்னதை ஏற்றுக்கொண்டு நடக்கிறதுதான சரியானது.

திரு. க. இராமமூர்த்தி : தலைவர் அவர்கள் சொன்னதுபோல், வழக்கை பாதிக்கக்கூடிய அளவில் என் பேச்சு அமையவில்லை. அரசு தன் பொறுப்பை இன்னும் சரியான முறையில் நிறைவேற்றியிருக்கலாம் என்பது தான் என் வாதம். அதை இச்சபையின் கவனத்திற்குக் கொண்டு வருவது என் பொறுப்பாகிறது என்றுதான் அதைக் கொண்டு வந்திருக்கிறேன். தலைவர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதோடு சிலவற்றையும் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்கு எனக்கு அனுமதியிருக்கிறது என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வது உங்களுக்கு விளங்க வேண்டும். இது அரசாங்கத்தின் அதிகாரவரம்பிறகு உட்பட்டதா இல்லையா என்பதுபற்றி உங்களைப் பேசச் சொல்லவில்லை. நான் அனுமதித்ததற்குப் புறம்பாக பேசியதை நீக்கவேண்டிய நிலையில் இருப்பேன். நான் கேட்டுக் கொண்டது, வழக்கு வரக்கூடிய நிலைமை இருக்கும்போதே, contempt சட்டப்படி வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் வழக்கு வரும் நிலைமை இருக்குமானால், அந்த நாளிலிருந்து அந்த வழக்கைப் பற்றியோ அல்லது வழக்கில் சம்பந்தப்பட்ட கருத்துக்கள், நிகழ்ச்சிகள் பற்றியோ பேசக் கூடாது. அப்படியில்லாமல் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டேன், இதுதான் சமயம் என்று குற்றச்சாட்டுகளையும், வேறு பல காரியங்களையும் சேர்த்துச் சொல்கிறீர்கள். இந்தப் பேரவையை ஒத்திவைக்கவேண்டும் என்பதற்கான காரணங்கள் குறித்து, உங்கள் துணைத் தலைவர் அவர்கள் சொன்ன காரணங்களுக்குமேல் ஏதாவது காரணம் இருந்தால் அதைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.

How is the hon. Member entitled to ask for the adjournment of the House even though there is the possibility of action ?

THIRU K. RAMAMOORTHY: Sir item (viii) of Rule 50 says " The matter to be discussed must involve more than the ordinary administration of the law ".

MR. SPEAKER : I have not given my consent for the adjournment motion. I can only ask hon. Members to help me to come to a decision on the point, whether it is admissible or not. I asked the Deputy Leader of the Opposition and he was good enough to confine himself to his point. But the hon. Member wants to go to another point.

THIRU K. RAMAMOORTHY : I am not going to any point. I am just helping the Deputy Leader, the House and the Speaker.

அதோடு அன்றைய தினத்திற்கு முந்திய தினம் கூட பெரிய மாணவர் மாநாடு அரசியல் மாநாடு நடந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கோர்ட்டில், அதைப் பற்றி, நடக்க வில்லை என்று தீர்ப்பு ஆக முடியும்.

You are an Advocate and you know what are facts and what is law. You are mentioning a fact and it may or may not be accepted by the Court later on to be the truth. Why do you refer to that ? நான் இது போதுமென்று நினைக்கிறேன்.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: On apoint of order, Sir, Mere filing of F.I.R. is not a judicial matter and hence not one coming under 'sub judice'.

MR. SPEAKER : I understand the point. But when there is a possibility of action, no opinion should expressed about the matter. That is the Law of Contempt. நீங்கள் சொல்லும் பாயிண்ட் ஆப் ஆர்டர் எனக்கு விளங்குகிறது. வழக்கு தாக்கல் செய்யப்படவில்லையென்றாலும் வழக்கு வரக்கூடிய நிலைமையில் இருக்கிறது என்று அரசாங்கம் தெரிவித்த பிறகு, அதற்குச் சாதகமாகவோ, பாதகமாகவோ, அல்லது இது சரி, இது தப்பு என்றோ, கருத்துச் சொல்லக்கூடாது.

THIRU SOWDI S. SUNDARA BHARATHI: On a point of clarification. A case does not start before the filing of a charge-sheet ; only after the charge-sheet is filed, a case starts.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்வது எனக்கு விளங்குகிறது. எனககு விளங்காமல் பதில் சொல்வதாக நினைக்க வேண்டாம். You say that a case starts only after the charge-sheet is filed in the Court. If there is a dispute about land or other property, pendency arises only after the filing of the case. But under the Law of Contempt even when the possib lity of action is there you should not express any opinion. வழக்கு நடக்கக்கூடிய நிலைமையிலிருக்கறது என்று சொன்னபிறகு நீங்கள் கருத்து தெரிவிக்கக்கூடாது. என்னுடைய அறைக்கு வந்தால் தீர்ப்பை எடுத்துக் காட்டுகிறேன். எனக்கு நேரடியாக தெரிந்த வழக்கு ஒன்றில் ஹைகோர்ட் அப்படி தீர்ப்பு அளித்திருக்கிறது. அதை எடுத்துக் காட்டுகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அவைத் தலைவரவர்களே, ஒற்றிவைப்புத் தீர்மானம் மூலம் கொண்டு வரப்பட்ட அத்தகைய செய்திகள் அன்றாட சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்படுத்த முடியாமல் போன தன்மையுடையது அல்ல. அன்றாட சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படுத்த முடியாமல் போகக்கூடிய செய்தியாக இது இல்லாமலிருப்பதால், ஒற்றி வைத்து விவாதிக்கவேண்டிய அவசியமில்லை. மதுரை நிகழ்ச்சி சம்பந்தப்பட்ட அந்தக் கலவரத்தில் யார் யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள், யார் யார் மீது வழக்கு தொடரப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்கில்லை. ஆனால் அங்கிருக்கும் சூழ்நிலையில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டுதான் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இன்ஸ்பெக்டர் ஒருவர் இருந்தார். அவரும் மற்ற போலீசாரும் அங்கு சமாளித்திருக்கிறார்கள். அவர்கள் அவ்வாறு சமாளிக்காவிட்டால், இன்னும் அதிக விளைவுகள் ஏற்பட்டிருக்கும். அவர்கள் அதில் ஈடுபட்டுச் சமாளித்தால்தான் இந்த அளவில் நடைபெற்று முடிந்திருக்கிறது. அந்த நிகழ்ச்சிகள் குறித்து இரு கட்சியினரும் கோர்ட்டுக்கு வந்திருக்கிறார்கள். அங்கு வெட்டப்பட்டது சம்மந்தமாக இரண்டு வழக்குகள் வந்திருக்கின்றன.

Under Sections 341 and 323 a case is registered against Velu and three others. Under Sections 147, 341 and 323 a case is registered against Nedumaran and five others.

ஆகஇரண்டுவழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இப்பொழுது வழக்குகள் சம்பந்தமாக ஆராய்வது வழக்குகளுக்குக் குந்தகம் ஏற்படுமென்பதால் அதைப்பற்றி விவாதிப்பது பொருத்தமாக இராது. போலீசார் சமாளிக்க வேண்டிய அளவிற்கு சமாளித்து இந்த நிலைமையை உருவாக்கியிருக்கிறார்கள். அதே கோர்ட்டுக்கு முன்னால் ஏற்கெனவே பல கொலைகள் பட்டப்பகலில் நிகழ்ந்திருக்கின்றன. பட்டப்பகலிலேயே இரண்டு, மூன்று கொலைகள் விழுந்திருக்கின்றன. இவைகள் ஏற்கெனவே நடைபெற்றிருக்கின்றன. எனவே இந்த ஆட்சியிலேதான் நடந்திருக்கிறது என்று கருதத் தேவையில்லை. போலீசார் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள். மேலும் இது சம்பந்தமாக நல்ல நிலைமை உருவாக வேண்டுமென்று, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எல்லாக் கட்சித் தலைவர்களையும் அழைத்துப் பேசி முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிகளின் விவரம், குறிப்புகள் வரவில்லை. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுத்திருப்பதால், அதைப் பற்றி விவாதிப்பதற்காக சபையை ஒற்றிவைக்க வேண்டிய அவசியமில்லை, சட்டப்படி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

MR. SPEAKER: As I understand that there is a possibility of action regarding the happenings which took place on the 4th March, I refrain from giving my consent to this adjournment motion. Also, I do not give my consent to the other motion given notice of by Thiru Chemaichamy.

இத்துடன் ஒற்றிவைப்பு தீர்மானங்கள் முடிவடைந்தன.

அடுத்து திரு. விநயகம் அவர்கள் மீதுள்ள உரிமைப் பிரச்சினைப் பற்றி குழுவுக்கு விவரங்கள் அனுப்பியிருக்கிறதா என்று கேட்டார்கள். அது பற்றி நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்துச் சொல்லுகிறேன். திருத்தப்பட்ட நடவடிக்கைக் குறிப்புகளை இன்னும் பார்க்க முடியவில்லை. எனவே இப்பொழுது பதில் சொல்ல முடியாமல் இருக்கிறேன். நடவடிக்கைக் குறிப்பைப் பார்த்த பிறகுதான் என்னால் முடிவு சொல்ல முடியும். நானே இன்னும் அதைப் பார்க்கவில்லை.

3. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ii) நூல்கத்தில் பேரவை நடவடிக்கைக் குறிப்புச் சுவடு வைக்கப்படுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் அவர்கள் திருத்தப்படாத நடவடிக்கைக் குறிப்புகளைப் பேரவை நூலகத்தில் வைப்பது குறித்து ஒரு பிரச்சினையை இந்தப் பேரவையில் எழுப்பினார்கள். அவர்களுக்கு நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நூலகத்தில் நடவடிக்கைக் குறிப்புகளை வைப்பதோ அல்லது வைக்காமல் இருப்பதோ பேரவைத் தலைவரின் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்டது. இதைப் பற்றிப் பேரவையில் கேள்வி கேட்கக்கூடாது. அதைப் பற்றி May's Parliamentary Practice 350-வது பக்கத்திலுள்ளதை நான் பல தடவைகள் படித்திருக்கிறேன். **Questions dealing with matters within the jurisdiction of the Speaker should be addressed to the Speaker by private notice.** நீங்கள் இதைப் பற்றிக் கடிதம் எழுதி அல்லது நேரிலே கேட்டு தகவல் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற விதி 350-வது பக்கத்தில் இருக்கிறது. அதற்குக் காரணமும் இருக்கிறது. என்னைப் பற்றி அல்லது பேரவைத் தலைவரின் அதிகாரத்திற்கு உட்பட்ட காரியங்களைப் பற்றி. நீங்கள் பேரவையில் எழுப்புவதாயிருந்தால், அதைக் குறித்து என்னுடைய கருத்துக்களைப் பேரவையிலே கூறுவதற்கு பேச்சுரிமை கிடையாது. அவ்வாறு நீங்கள் சொல்வதற்குப் பதில் சொல்ல முடியாமல் இருப்பதால் தான் இந்த விதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் தாங்கள் எழுப்பிய பிரச்சினையைப் பற்றி அடுத்த வாரம் நடைபெறவிருக்கிற "நடைமுறை விதிக் குழு" "ரூல்ஸ் கமிட்டி"யில் வைக்கச் சொல்லியிருக்கிறேன். அதில் தங்கள் கருத்துக்களைக் கூறி அதற்கு எடுக்க வேண்டிய முடிவுகளை எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.